# இடம் பொருள் கலைஞர்

86

**பன்னீர் பெருமாள்**

பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் மகளிர் காவல்!




# காவல் துறையில் மகளிர்!

## பெரியார் குரல் – கலைஞர் கையெழுத்து!

இந்தியத் துணைக்கண்டத்தில் பெண்களுக்கான உரிமைப் போராட்டத்தை, நூறாண்டுகளுக்கு முன்பே தொடங்கியது, திராவிட இயக்கம். பெண்களுக்கு முதன்முதலில் வாக்குரிமை அளித்தது, திராவிட இயக்கத்தின் முன்னோடியான நீதிக்கட்சி அரசு. பெண்களுக்கு முதன்முதலாக சொத்துரிமை வழங்கியது, முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழக அரசு. அந்த வரிசையில், பெண் காவலர் படை, இந்தியாவில் முதல்முறையாக தொடங்கப்பட்டதும், முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சிக் காலத்தில்தான்.

பெண்களுக்கு சொத்தில் சம உரிமை வழங்கக்கோரி, 1929-ஆம் ஆண்டு, செங்கல்பட்டு முதல் சுயமரியாதை மாநாட்டில் பெரியாரால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானம், 1989-இல் கலைஞர் ஆட்சியில் அமலானது. அதைப் போலவே 1931-ஆம் ஆண்டு விருதுநகரில், நடந்த சுயமரியாதைப் பெண்கள் மாநாட்டில், பெண்கள், காவல் துறைப் பணிகளில் சேர்க்கப்பட வேண்டுமென்று நிறைவேற்றப்பட்ட தீர்மானம் 1973-ஆம் ஆண்டு கலைஞர் ஆட்சியில்தான் நிறைவேற்றப்பட்டது.

### பெரியார் எழுப்பிய குரல்

பெண்ணுரிமை குறித்து, சர்வதேசக் குரலாக , தமிழ்நாட்டில் இருந்து இயங்கியவர் பெரியார். ஆண்களைப் போல பெண்களும் முடி வெட்டிக் கொள்ள வேண்டும், உடை உடுத்த வேண்டும் என்றெல்லாம் தொடர்ந்து பேசி வந்த பெரியார், "பெண்கள் உடல் வலிமையிலும் சிறப்படைய வேண்டும். தேகப்பயிற்சி, ஆயுதப் பயிற்சி முதலிய பழக்கங்களைப் பெற்றிருக்க வேண்டும்" என 17.7.1932 அன்று 'குடி அரசு' ஏட்டில் எழுதினார்.

1946-ஆம் ஆண்டு ஒடிசாவில் 'போலீஸ் தவிர, மற்ற வேலைகளில் பெண்களை ஈடுபடுத்துவோம்' என கொண்டுவரப்பட்டது. 'ஏன், போலீஸ் வேலையை மட்டும் ஒதுக்குகிறீர்கள்?" என்று அறிக்கை வெளியிட்டு, எதிர்வினையாற்றினார் பெரியார்.

"போலீசாருக்கு பொதுமக்கள் அஞ்சுகிறார்கள் என்றால், அவர்களுக்கு இருக்கும் தனிப்பட்ட வலுவினால் அல்ல. அவர்கள் கையில் இருக்கும் குண்டாந்தடி அல்லது துப்பாக்கிக்கும், அவர்களுக்குள்ள அதிகாரத்துக்குமே அஞ்சுகிறார்கள். எனவே, பெண்கள் கையிலும் துப்பாக்கியைக் கொடுக்க வேண்டும். இரஷ்யாவில் பெண் போலீஸ் படை திறமையாக வேலை செய்கிறது. இந்த நாட்டிலும் போலீஸ் வேலை செய்யும் துணிவும் திறமையும் ஆசையும் உள்ள பெண்கள் ஆயிரக்கணக்கில் இருக்கிறார்கள். பெண்கள் படிப்பது பெரிய அதிசயமாகவும், சைக்கிள் விடுவது



முதல் பெண் போலீஸாரின் அணிவகுப்பு

வேடிக்கையாகவும் பார்க்கப்பட்டது போலவே, போலீஸ் உத்தியோகமும் சில ஆண்டுகள் வரையில் அதிசயமாகத் தோன்றலாம். பிறகு நாளடைவில், அதுவும் இயற்கைக் காட்சியாகவே போய்விடும்" என்று 18.11.1946 அன்று விடுதலையில் எழுதினார், பெரியார்.

### கலைஞர் வந்தார்... சட்டம் வந்தது!

1962-ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் காவல் துறை மானியக் கோரிக்கை விவாதத்தில் கலைஞர் பேசும்போது, "பெண் காவலர்களை இன்றைய அரசு நியமிக்குமா, என்ற கேள்வியை எழுப்பினார். ஆனால், பதில் வரவில்லை. கலைஞரின் கேள்விக்குப் பதில் கிடைக்க, கலைஞரே ஆட்சிக்கு வரும்வரை காத்திருக்க வேண்டியிருந்தது.

தான் வாழ்ந்த காலத்திலேயே தனது கொள்கைகள் சட்டங்களாகவும், திட்டங்களாகவும் நடைமுறைக்கு வந்ததை உலகில் கண்ட தலைவர்கள், மிகச் சொற்பமே. அத்தகைய தலைவர்களுள் தந்தை பெரியார் முக்கியமானவர். பேரறிஞர் அண்ணாவாலும், முத்தமிழறிஞர் கலைஞராலும் பெரியாருக்கு அந்த வாய்ப்பு வசப்பட்டது. பெண்களை காவல் துறையில் சேர்க்க, 05.09.1973 அன்று அரசாணை பிறப்பிக்கப்பட்டு, முதன்முதலாக 22 பெண்



காவலர்கள் பணியில் சேர்க்கப்பட்டனர். ஒரு உதவி ஆய்வாளர், ஒரு ஏட்டு மற்றும் 20 காவலர்கள் அடங்கிய சிறிய மகளிர் காவல் படை உருவானது. அந்தப் பெண் காவலர் படைக்கு முதல் உதவி ஆய்வாளராக தலைமை தாங்கும் பொறுப்பை உஷாராணி பெற்றார்.

தொடர்ந்து, பெண் காவலர்களை அதிகப்படுத்தும் முயற்சிகளும் கலைஞர் ஆட்சியில் முன்னெடுக்கப்பட்டன. 1990- ஆம் ஆண்டு பெண் காவலர்களின் எண்ணிக்கை 857-ஆக உயர்ந்தது. அதே ஆண்டு, எண்ணூர் முதல்நிலை பெண் காவலர்களைத் தேர்வு செய்து அவர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்பட்டது. பயிற்சி கொடுக்கப்பட்ட அந்த காவலர்களைப் பணியமத்துவதற்கான தேவை ஏற்பட்ட காரணத்தினாலேயே, அதற்கு பின்னர் அனைத்து மகளிர் காவல் நிலையம் உருவாக்கப்பட்டது. 1999-ஆம் ஆண்டு கழக ஆட்சியில் இயங்கி வந்த 57 அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கும் தலா, ஒரு மொபட் வழங்கி, பெண் காவலர்கள் ரோந்துப் பணிகளில் ஈடுபடுவதை ஊக்குவித்தார்.

### காவல் துறையில் கோலோச்சும் பெண்கள்!

காவல் துறையில் பெண்களைச் சேர்க்கவே பெரும் போராட்டம் நடந்த வரலாறு, இன்றைக்குத் தலைகீழாக மாறி, இந்தியாவில் அதிக பெண் காவலர்களைக் கொண்ட ஐந்து மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாக உருவெடுத்துள்ளது. இப்போது தமிழ்நாட்டுக் காவல் துறையில் பெண் காவலர்களின் சதவிகிதம் 21 சதவிகிதமாக உள்ளது. அதை விரைவில், 33 சதவிகிதமாக உயர்த்தவும், அரசு இலக்கு வைத்துள்ளது.

பெண் காவலர், பெண் உதவி ஆய்வாளர், பெண் ஐ.பி.எஸ். அதிகாரி எனக் காவல் பணியில் சேர்ந்த நிலையில், தமிழ்நாடு தேர்வாணையம் நடத்தும் நேரடி நியமன டி.எஸ்.பி. பதவியில் மட்டும் எந்த ஒரு பெண்ணும் பணியில் சேர இயலாத சூழல் இருந்து வந்தது. இந்நிலையில், 1989-இல் தி.மு.க. ஆட்சி அமைந்தபோது, இத்தகைய குரூப்-1 தேர்வு உயர் பதவிகளை, பெண்கள் அடைய வேண்டும் என்பதற்காகவே, அரசுப் பணியில் பெண்களுக்கு 30 சதவிகித இட ஒதுக்கீட்டை கலைஞர் வழங்கினார். இதன் விளைவாக, குரூப்-1 தேர்வின் மூலமாகவும் பெண்கள் பலர் காவல் துறை உயர்பதவிகளை அலங்கரித்தனர்.

ஒட்டுமொத்தமாக, தற்போது 35 ஆயிரத்து 329 பெண்கள், தமிழ்நாட்டுக் காவல்துறையில்

> **அந்தப் பெண் காவலர் படைக்கு முதல் உதவி ஆய்வாளராக தலைமை தாங்கும் பொறுப்பை உஷாராணி பெற்றார்.**

இருக்கின்றனர். அதில், 1 டி.ஜி.பி., 2 கூடுதல் டி.ஜி.பி.க்கள், 14 ஐ.ஜி.க்களும் உள்ளனர். தமிழ்நாட்டில் உள்ள 1,498 காவல் நிலையங்களில் 503 காவல் நிலையங்களுக்கு சட்டம்-ஒழுங்கு பிரிவுக்குப் பெண் ஆய்வாளர்கள்தான் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

### திராடவிட மாடலின் நீட்சி

பெண் காவலர் திட்டம் நடைமுறைக்கு வந்து, பொன்விழா கண்டிருக்கிறது தமிழ்நாடு.

ஒருகாலத்தில், துணையில்லாமல் பெண்கள் வெளியே செல்வதே அரிது. இன்று, மக்களின் பாதுகாப்புக்கான காவல் துறையில் பெண்களின் பங்கு தவிர்க்க முடியாததாக உள்ளது. 'கலைஞரின் தொலைநோக்கு காலத்தை வெல்லும்' என்பதற்கு, பெண் காவலர்கள் நியமனமும் என்றென்றைக்கும் சான்று.

**...வலம் வருவோம்**

## ஆர்.எஸ்.எஸ். தடை நீக்கம், ஓய்வுபெற்றவர்களின் ஆலோசனை!

இந்தியாவில் அரசு ஊழியர்கள், ஆர்.எஸ்.எஸ். அமைப்பில் இணைந்து செயல்படுவதற்கு,1966-ஆம் ஆண்டு தடை விதிக்கப்பட்டது. 58 ஆண்டுகளாக நீடித்து வந்த தடையை ஒன்றிய பா.ஜ.க. அரசு சமீபத்தில் நீக்கியது. இதன் மூலம் அரசு ஊழியர்கள், வெளிப்படையாக ஆர்.எஸ்.எஸ். போன்ற மதவெறி அமைப்புகளில் செயல்படலாம் என ஊக்கத்தினை அளித்துள்ளது.

ஓய்வுபெற்ற அரசு ஊழியர்கள் ஆர்.எஸ்.எஸ். அமைப்பில் செயல்படுவதற்கு இந்த உத்தரவு தடையாக உள்ளது, என மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த ஓய்வு பெற்ற அரசு ஊழியர் ஒருவர் பொதுநல வழக்கு தாக்கல் செய்துள்ளார். இதை விசாரித்த, மத்தியப் பிரதேச உயர் நீதிமன்றம், இந்தத் தடை பணியில் உள்ளவர்களுக்கு மட்டுமே பொருந்தும் என்றும், ஓய்வுபெற்ற நபரின் சுதந்திரத்தைப் பாதிக்காது என்று கூறியதுடன், அவரது மனுவை விசாரணை செய்ய, ஒன்றிய அரசுக்கு நோட்டீஸ் அனுப்பியது. இந்த அடிப்படையில்தான் ஆர்.எஸ்.எஸ். மீதான தடையை ஒன்றிய அரசு நீக்கியுள்ளது.

இப்போது, ஓய்வுபெற்ற நீதிபதிகளே சங்க் பரிவார் அமைப்புகளின் ஆலோசனைக் கூட்டங்களில் வெளிப்படையாகக் கலந்து கொள்கின்றனர். சட்டத் துறை அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் தலைமையில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில், 30-க்கும் மேற்பட்ட ஓய்வுபெற்ற நீதிபதிகள் கலந்துகொண்டு, இந்துத்துவ அமைப்புகள் எதிர்கொள்ளும் சட்ட சிக்கல்களுக்குத் தீர்வுகள் காண்பது தொடர்பாக ஆலோசனை அளித்துள்ளனர்.

இது தொடர்பாக, முன்னர் கருத்து தெரிவித்திருந்த அரசியல் விமர்சகர் சித்தார்த் வரதராஜன், "ஒருவேளை நீதிபதிகள் ஆர்.எஸ்.எஸ்.-இல் இணைவதற்கு, ஓய்வுபெறும் வரை இனி காத்திருக்க வேண்டியதில்லை" எனக் கூறியிருந்தார். ஓய்வு பெற்றவர்கள் இப்போது வெளிப்படையாக இயங்கத் தொடங்கிவிட்டனர்.

## ஃப்ளாஷ்பேக்





கவிஞர் ரவிதாசன்

### தொடர்ந்து எழுதுங்கள், வாழ்த்துகள்!

12.12.2001 அன்று எனது கவிதை நூல்களை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடம் வழங்க, துறைமுகம் காஜாவிடம் அனுமதி கேட்டேன். அவர் சில விவரங்களை எழுதி வாங்கிக்கொண்டு, 'தலைவர் வரச்சொன்னால் உங்களை அழைப்பேன்' என்றார். உடனே, உள்ளே சென்று திரும்பியதும் "உங்களைத் தலைவர் வரச் சொல்கிறார்" என்றார். உள்ளே செல்லும்போது, பேராசிரியரும் உடன் அமர்ந்திருந்தார். நான் இருவருக்கும் வணக்கம் சொன்னேன். கலைஞர் ஐயாவிடம் நான் எழுதிய நூல்களை அளித்தேன். நூல்களைப் புரட்டிப் பார்த்தவர், படிக்கத் தொடங்கிவிட்டார். ஒரு சில நிமிடங்களுக்குப் பின் என்னைப் பார்த்து, "நல்லா எழுதியிருக்கீங்க. தொடர்ந்து எழுதுங்கள். வாழ்த்துகள்!" என்றார். அப்படியான நேரத்தில் எடுத்துக்கொண்ட புகைப்படம் இது.

– **கவிஞர் ரவிதாசன், காஞ்சிபுரம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### அண்ணாவைப் பரிந்துரை செய்த அமைப்புக் குழு!

1949-ஆம் ஆண்டு செப்டம்பர் 17-ஆம் தேதி தி.மு.கழகம் உதயமான அடுத்த நாள் காலை 7 மணிக்கு, கழகத்தின் அமைப்புக் குழு என்.வி.நடராசன் தலைமையில் கூடியது. இந்தக் குழுவில் முன்னோடிகள் கே.கே.நீலமேகம், ஏ.சித்தையன், கே.வி.கே.சாமி, எஸ்.முத்து, ஜி.பராங்குசம், கே.கோவிந்தசாமி ஆகியோர் இருந்தனர். இந்தக் குழுவின் பரிந்துரைப்படிதான் அறிஞர் அண்ணா கழகத்தின் முதல் பொதுச்செயலாளரானார்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

598

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131